**தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்**
பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.
தலைமை இடம் - சென்னை.

| | | |
|---|---|---|
| **S.நாகராஜன்** | **K.சந்திரசேகரன்,B.A.,** | **B.தியாகராஜன், M.Com.,** |
| தலைவர் | பொதுச்செயலாளர் | நிதிச்செயலாளர் |

**சுற்றறிக்கை எண்: 19/2018** 10-12-2018

அன்புகெழுமிய சங்க பொறுப்பாளர்களுக்கு பொதுச்செயலாளரின் வாழ்த்துக்களும் வணக்கங்களும். மத்திய சங்கத்தின் 30-11-2018 தேதிய சுற்றறிக்கை வாயிலாக தெரிவித்திருந்தபடி எதிர்வரும் 08-01-2019 மற்றும் 09-01-2019 ஆகிய இரண்டு நாட்கள் 12 அம்ச கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தப் போராட்டம் நடத்திட மத்திய தொழிற்சங்க மையங்கள் எடுத்துள்ள முடிவின்படி வேலை நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொள்வது குறித்து நமது சங்கத்தின் நிலைபாடுகளை முடிவெடுத்திட சங்கத்தின் உயர்மட்டக்குழுக் கூட்டம் 08-12-2018 அன்று சங்கத்தலைவர் திரு.**S.**நாகராஜன் அவர்கள் தலைமையில் சென்னையில் நடைபெற்றது. திருச்சி மண்டலச் செயலாளர் திரு.லியாகத்அலி அவர்கள் அவருடைய சொந்த ஊரான புதுக்கோட்டையில் கஜா புயல் நிவாரணபணி தொடர்பாக புள்ளி விபரங்கள் எடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதைக் கூறி உயர்மட்டக் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ள இயலாமையையும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொள்வது தொடர்பாக திருச்சி மண்டலத்தின் நிலைப்பாட்டையும் தலைவர் மற்றும் பொதுச்செயலாளரோடு கைப்பேசி வாயிலாக தொடர்பு கொண்டு தெரிவித்தார். ஏனைய அனைத்து உயர்மட்டக்குழு உறுப்பினர்களும் சிறப்பு அழைப்பாளர்கள் திரு.**M.**சண்முகசுந்தரம்(விழுப்புரம்) அவர்களும் திரு.**T.**தேசியப்பன்(திருவில்லிப்புத்தூர்) அவர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். வேலை நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொள்வது குறித்து உயர்மட்டக்குழு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது.

12 அம்ச கோரிக்கைகள் நியாயமானவை கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் நடத்த வேண்டியது அவசியம். ஆனால், இரண்டுநாள் வேலை நிறுத்தம் நடத்திட அறிவிப்பு கொடுத்திட சங்கத்தின் பொதுக்குழுவிலோ, செயற்குழுவிலோ வைத்து விவாதித்து முடிவெடுத்திட வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை.

கஜாபுயல் காரணமாக தமிழகத்தின் 3ல் 1பங்கு பகுதிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகி உள்ளது. புயல் காரணமாக மின்சாரத்துறை மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகி அவைகளை சீராக்கும் பணியில் வாரியத்தின் பல வட்டங்களிலிருந்து தொழிலாளர்கள் மேற்கண்ட பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

புயல் நிவாரணப்பணியில் சங்கப்பொறுப்பாளர்களும் ஈடுபட்டுள்ள நிலையில் இந்த காலக் கட்டத்தில் வட்டப் பகுதிகளில் வேலைநிறுத்தத்திற்கான ஆயத்த பணிகளை மேற்கொள்வது மிகவும் சிரமமானது. எனவே, மேற்கண்ட சூழ்நிலையில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் நமது சங்கம் கலந்து கொள்வதில்லை என முடிவெடுக்கப்படுகிறது. இருப்பினும் மேற்கண்ட போராட்டத்திற்கு தார்மீக ஆதரவு கொடுப்பது தொடர்பாக உரிய முடிவினை எடுத்து அறிவித்திடும் அதிகாரத்தை தலைவர், பொதுச்செயலாளர், நிதிச்செயலாளர் ஆகியவர்களுக்கு அளிப்பது என முடிவெடுக்கப்பட்டது.

தொடர்ந்து இயக்கத்தை வலிமையாக்கிட செயற்குழுவால் நியமிக்கப்பட்ட துணைக்குழு தலைவர்கள் திருவாளர்கள் 1)**T.**தேசியப்பன், 2) **M.**சண்முகசுந்தரம், 3)**N.**கணேசன் ஆகியோர் துணைக்குழுக்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள உள்ள நடவடிக்கைகள் குறித்து விபரங்களைத் தெரிவித்தனர்.

அதன்பின் சங்கத்தின் செய்தி தொடர்புகளை மேம்படுத்திட பரிந்துரைகள் வழங்கிட அமைக்கப்பட்ட துணைக்குழு உறுப்பினர் திரு.**B.**கோபாலகிருஷ்ணன் அவர்கள் துணைக்குழு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து விபரங்களைத் தெரிவித்தார். அவர்தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டது.

1. பல்வேறு கைபேசி நிறுவனங்கள் மிக குறைந்த கட்டணங்களில் அனைத்து தொலைபேசி, கைபேசி இணைப்புகளுக்கும் இடைவிடாது தொடர்பு கொள்ளும் பல்வேறு திட்டங்களை அமுல்படுத்தி நடைமுறைபடுத்தி வருவதால் தற்போது நமது சங்கப் பொறுப்பாளர்களுக்கிடையே பயன்படுத்திவரும் குழுகைபேசி திட்டம் **(CUG)** பயன்அற்றது என கருதுவதால் **01/2019** முதல் மேற்கண்ட குழு திட்டத்தை கை விடுவது என முடிவு எடுக்கப்பட்டது. இதற்காக பெறப்பட்டுள்ள கைபேசி எண்களின் **Activation** 29-02-2020 வரை உள்ளதால் தேவைப்படுபவர்கள் அதனை அதுவரை பயன்படுத்தி கொள்ளலாம். தேவைப்படுபவர்கள் தொடர்ந்து **Activation** செய்து கொள்ளவும், **Topup** செய்து கொள்ளவும் முடிவு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் மத்திய சங்கப்பொறுப்பாளர்களுக்கும், மண்டலச் செயலாளர்களுக்கும் மத்திய சங்கத்திலிருந்து மாதம் ரூ.100/- **Topup** செய்து வருவது 01-01-2019 முதல் நிறுத்தி கொள்ளப்படுகின்றது. மத்திய சங்க பொறுப்பாளர்களும், மண்டல செயலாளர்களும் 01-01-2019 முதல் தங்களுடைய கை பேசிகளுக்கு தாங்களே **Topup** செய்து கொள்வது எனவும் அவ்வாறு செய்து கொள்ளும் தொகையினை காலாண்டுக்கு ரூ.500/-க்கு மிகாமல் மத்திய சங்கத்தில் இருந்து திரும்பப்பெற்றுக் கொள்ளலாம் **(Reimbursements)** எனவும் முடிவு செய்யப்பட்டது.
2. இனிவரும் காலங்களில் மத்திய சங்கத்திலிருந்து இரண்டு வகையில் சுற்றறிக்கையினை அனுப்புவது (அ).சிலசுற்றறிக்கைகளை அவ்வப்பொழுது மத்திய சங்கப்பொறுப்பாளர்கள், மண்டலச்செயலாளர்கள், வட்டச்செயலாளர்கள் வரை அனுப்பப்படும். (ஆ).மாதாந்திர சுற்றறிக்கைகளை மாநிலப்பொதுகுழு உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைத்து பொறுப்பாளர்களுக்கும் **(Printed Notice)** அனுப்பிவைக்கப்படும். மேற்கண்டவாறு சுற்றறிக்கைகளை அனுப்பிவைத்திட ஏதுவாக வட்டச்செயலாளர்கள் தங்களுடைய வட்டங்களுக்குட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் வரையிலான பொறுப்பாளர்களின் அஞ்சல் முகவரியினை பின் கோட்டுடன் தெளிவாக 31-12-2018 க்குள் மத்திய சங்கத்திற்கு அனுப்பி வைத்திட கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

<u>இதர செய்திகள்:</u>

1. கணக்கதிகாரி பொறுப்பிற்கு பதவி உயர்வு பட்டியல் தயாரித்திட 06-12-2018 அன்று கூடிய **DPC** சில விவரங்கள் தேவைப்படுவதை அடுத்து முற்றுப்பெறாமல் மீண்டும் விரைவில் கூடி பட்டியலை இறுதியாக்கிட உள்ளது.
2. கணக்காய்வாளர் பதவிக்கு பதவி உயர்வு பட்டியல் தயாரிக்கும் இறுதி கட்டப்பணி நடைபெற்று வருகின்றது.
3. ஏற்கனவே அனுமதிக்கப்பட்டு உள்ள கணக்கீட்டு அலுவலர் பதவி உயர்வு பட்டியலில் மீண்டும் 12பேருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இறுதிநபர் வரிசை எண்:162, திரு.**G.**தாமோதரன் திருச்சி பெருநகர்வட்டம்.
4. நமது கோரிக்கையின் அடிப்படையில் இளநிலை உதவியாளர்(கணக்கு) பொறுப்புக்கு உள்முகத் தேர்வின் மூலம் 10-12-2018 முற்பகல் 10.30 மணிமுதல் 29-12-2018 பிற்பகல் 05.30 மணி முடிய **Online**ல் விண்ணப்பித்திட உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.**(TNEB Adm.branch Lr.No.053299/398/G.56/G.561/2018 dt:06-12-2018).**

வாழ்த்துக்கள்

தோழமையுள்ள

பொதுச்செயலாளர்

பெறுநர்: மத்திய சங்கப் பொறுப்பாளர்கள், மண்டலச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள்